**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.**

**முன்னிலை: திரு. K. முரளிதரக்கண்ணன், B.A., B.L.,**
**தலைமை நீதித்துறை நடுவர், பெரம்பலூர்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ஆம் நாள் திங்கள்கிழமை

**குற்ற பல்வகை மனு எண்.316/2026**
**(CNR No: TNPB02-000761-2026)**

கணேசன், 56/2025,
த.பெ. ராமலிங்கம்,
சிவன் கோவில் தெரு,
எசனை போஸ்ட்,
பெரம்பலூர் தாலுக்கா & மாவட்டம். **.. மனுதாரர்/5-ம் எதிரி.**

**/எதிர்/**

தமிழ்நாடு அரசுக்காக,
CBCID பெரம்பலூர் காவல் நிலைய ஆய்வாளர் மூலம்,
குற்ற எண்.3/25
**.. எதிர்மனுதாரர்/புகார்தாரர்.**

இந்த மனு இன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு. S. செந்தில்குமார்** ஆஜராகியும் எதிர் மனுதாரர்/ அரசு தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞரும் முன்னிலையாகி இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையிலும், மனு, பதிலுரை மற்றும் வழக்கில் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் பின்வருமாறு இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

இந்த மனு மனுதாரர்/5–வது எதிரி மீது அரசு தரப்பில் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 120(B), 420, 465, 468, 471, உ/இ சின்னங்கள் மற்றும் பெயர் (முறையற்ற பயன்பாட்டை தடை செய்தல்) சட்டம் பிரிவுகள் 3 மற்றும் 5–ன் கீழ் பதியப்பட்ட குற்ற வழக்கில் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS) பிரிவு 187 (3)–ன் கீழ் பிணைகோரி மனுதாரர்/5 வது எதிரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. அரசு தரப்பு வழக்கானது பாதிக்கப்பட்ட புகார்தாரர் முத்தரசன் என்பவர் எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் வேப்பூர் சாத்தநத்தம் என்னும் ஊரை சேர்ந்த 2–ம் எதிரி ஆதிமூலம் புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலையில் சவரிமுத்து அருள்தாஸ் நினைவு அறக்கட்டளையை 1–ம் எதிரி AC. ரவிச்சந்திரன் நடத்தி வருவதாகவும், அவரிடம் ரூபாய் ஒரு லட்சம் கொடுத்தால் ஒரு கோடி ரூபாய் திருப்பித் தருவதாகவும், அந்த பணத்தினை 3 அல்லது 4 மாதங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும், பணம் கட்டினால் புகார்தாரருக்கு அடையாள அட்டை போட்டு தருவதாகவும், ஒரு அடையாள அட்டையானது 5 கோடி முதல் 10 கோடி வரை மதிப்பிலானது என்றும், ரிசர்வ் வங்கியில் இருந்து பணம் வந்தவுடன் பிரித்துக் கொடுத்துவிடுவதாகவும் கூறி புகார்தாரரை நம்பவைத்து புகார்தாரரிமிருந்து கடந்த 03.03.2013–ம் தேதி புகார்தாரரிடம் ரூபாய் மூன்று லட்சத்தை பெற்றுக்கொண்டதாகவும், அதே போன்று மேற்படி ஆதிமூலம் அறிமுகப்படுத்திய பாப்பாங்கரையை சேர்ந்த அருணாச்சலம் என்பவர் 15.04.2013–ம் தேதி ரூபாய் 2 லட்சமும் முசிறியை சேர்ந்த ஆனந்த் என்பவர் 10.05.2011–ம் தேதி ரூபாய் 1 லட்சமும் எசனையை சேர்ந்த கணேசன் வாத்தியார் என்பவர் 04.08.2011–ம் தேதி ரூபாய் 2 லட்சமும் அரியலூர் மோகன் என்பவர் 07.05.2014–ம் தேதி ரூபாய் 3 லட்சமும்

திண்டுக்கல்லை சேர்ந்த கங்காதரர் என்பவர் 11.05.2014-ம் தேதி ரூபாய் 5 லட்சமும், கல்கி ராஜசேகர் என்பவர் 06.08.2014-ம் தேதி ரூபாய் 2 லட்சமும் என மொத்தம் 18 லட்சம் பணத்தை பெற்றுக் கொண்டும், ரூபாய் 7 லட்சத்திற்கான பாராத ஸ்டேட் வங்கிகுண்டான காசோலை ஒன்றை கொடுத்ததாகவும், புகார்தாரர் பணத்தை திருப்பி தருமாறு கேட்ட போது எதிரிகள் அனைவரும் பணத்தை 1-ம் எதிரியிடம் கொடுத்துவிட்டதாகவும், ஒரு வருடத்தில் ஒரு கோடி ரூபாய் வந்துவிடும் என்றும், 1-ம் எதிரி இந்திய ரிசர்வ் வங்கியின் பெயரில் ஒரு ஆவணத்தையும், Source of income certificate ஒன்றையும் கொடுத்துவிட்டு பணத்தை கொடுக்காமல் இந்திய ரிசர்வ் வங்கியில் பணத்தை கட்டினால் அதிக லாபம் கிடைக்கும் என மேற்படி 8 எதிரிகளும் ஆசை வார்த்தைகள் கூறி ஒன்று சேர்ந்துக் கொண்டு கூட்டு சதி செய்தும் நம்பிக்கை மோசடி செய்தும், பொய்யான ஆவணத்தை கொடுத்து ஏமாற்றியதாகவும், மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

03. மனுதாரர்/5-வது எதிரி தரப்பில், மனுதாரர் ஒரு அப்பாவி என்றும் அவருக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், வழக்கு சம்பவமானது 03.03.2013-ம் தேதி நடைபெற்றதாக அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் கடந்த 15.10.2025-ம் தேதிதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி புகாரின் அடிப்படையில் மனுதாரர் கைது செய்யப்பட்டு 30.12.2025-ம் தேதி முதல் சுமார் 63 நாட்களுக்கும் மேலாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், அரசு தரப்பில் இன்னும் புலன் விசாரணை முடிக்கப்படவில்லை என்றும், சட்டப்படியான காலவரையறைக்கு பின்னரும் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மனுதாரர்/5-ம் எதிரி சட்டப்படியான பிணை பெறுவதற்கு

உரிமையுடையவர் ஆகிறார் என்றும், எனவே மனுதாரருக்கு சட்டப்படியான பிணை வழங்குமாறு வாதிடப்பட்டுள்ளது.

04. அரசு தரப்பில் இந்த வழக்கில் மனுதாரர் 5–வது எதிரி என்றும், அவர் கடந்த 30.12.2025–ம் தேதியில்தான் இந்த வழக்கில் நீதிமன்ற காவலுக்கு அனுப்பட்டதாகவும், புலன் விசாரணை ஆரம்ப கட்ட நிலையில் இருந்து வருவதாகவும், மனுதாரர்/5–வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் புதிய சங்கதிகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையில் புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும், இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற எதிரிகளையும் கைது செய்ய வேண்டியுள்ளதாகவும், இந்த எதிரி 1–ம் எதிரியின் ஏஜென்டாக செயல்பட்டு சதி செய்து பொதுமக்களிடம் பணத்தை பெற்றுள்ளதாகவும், மேற்படி எதிரியும் அவரது ஏஜென்டான அருணாச்சலம் என்பவரும் சேர்ந்து சுமார் 30 பேரை உறுப்பினர்களாக 1–ம் எதிரியின் அறக்கட்டளையில் சேர்த்துவிட்டு அவர்களுக்குண்டான கமிஷன் தொகை நீங்கலாக சுமார் 90 லட்ச ரூபாயை பொதுமக்களிடமிருந்து ஏமாற்றி மோசடியாக பெற்று 1–ம் எதிரியிடம் கொடுத்துள்ளதாகவும், அதற்காக தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலுள்ள வங்கிகளில் சுமார் 37 வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இந்த எதிரியின் வீட்டில் வைத்து 2 மற்றும் 3 எதிரிகளின் முன்னிலையில் பாதிக்கப்பட்ட புகார்தாரர் இந்த எதிரியிடம் ரூபாய் 2 லட்சத்தை ரொக்க தொகையாக கொடுத்துள்ளதாகவும், இந்த எதிரி அரசு பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வருவதால் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவரது துணை முகவரான தலைமறைவாக உள்ள எதிரி அருணாச்சலம் என்பவர் மூலம் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கில்

தொடர்புடைய எதிரி அருணாச்சலம் உள்ளிட்ட மற்ற எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதாகவும், இந்த வழக்கின் எதிரிகளால் தமிழகத்திலுள்ள சுமார் மூவாயிரம் நபர்களுக்கு மேலாக ஏமாற்றப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள ரூபாய் 40 கோடிக்கும் மேலான தொகையை பறிமுதல் செய்யவேண்டியிருப்பதாகவும், இந்நிலையில் எதிரி பிணையில் விடுவிக்கப்பட்டால் அவர் தலைமறைவாகிவிடவும், சாட்சிகளை கலைத்துவிடவும் வாய்ப்புள்ளதாகவும், மேலும் இதே போன்ற குற்றசம்பவங்களில் மேற்படி எதிரி ஈடுபடுவார் என்றும், அதனால் நீதிக்கு முடிவில்லாமல் போய்விடும் என்றும், மேலும் எதிரி மீது இதேபோன்ற குற்றச்சாட்டுகள் கொண்ட வழக்கு புதுக்கோட்டை மாவட்ட குற்றப்பிரிவு குற்றபுலனாய்வு துறை காவல்நிலைய குற்ற எண்.2/2025–ல் பதிவு செய்யப்பட்டு வழக்கின் புலன் விசாரணை நிலையில் இருந்துவருவதாகவும், எனவே மனுதாரரின் பிணை கோரும் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/எதிரி தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்ற பிரிவுகளின் அடிப்படையில் மனுதாரர்/5–வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்ற பிரிவுகளின் அடிப்படையில் கடந்த 30.12.2025–ம் தேதி முதல் 63 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். அரசு தரப்பில் வழக்கின் புலன்விசாரணை ஆரம்ப கட்ட நிலையிலேயே இருந்து வருவதாக வாதிடப்பட்டுள்ளது. மனுதாரர்/5–ம் எதிரி தரப்பில் சட்டப்படியான பிணை கோரி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS) பிரிவு 187 (3)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யும் பொழுது இந்த வழக்கின் குற்ற சம்பவமானது 03.03.2013–ம் தேதியிலிருந்து துவங்குவதாக தெரியவருகிறது. அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச

பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தனக்கு சட்டப்படியான பிணை கோரி கு.வி.மு.ச பிரிவு 167(2)–ன் கீழ் பிணை மனுவை தாக்கல் செய்யாமல் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS) பிரிவு 187 (3)–ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்கதக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே வேளையில் தவறான சட்டப்பிரிவுகளின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரரின் சட்டப்படியான பிணை கோரும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்யாமல் பிணை மனுவை நிராகரிப்பது இயற்கை நீதியின் அடிப்படையில் நியாயமான தீர்வாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவை கு.வி.மு.ச 167(2)–ன் கீழ் பரிசீலனை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இம்மனுவில் கு.வி.மு.ச 167(2)–ன் படி இந்த மனுதாரர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட தேதியான 30.12.2025–ம் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அரசு தரப்பில் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்யப்பட வேண்டியது கட்டாயமான ஒன்றாகும். அவ்வாறு சட்டப்படியான காலவரையறைக்குள் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படாவிட்டால் மனுதாரருக்கு சட்டப்படியான பிணை பெறுவதற்கு உரிமை கிடைத்துவிடும். அதனடிப்படையில் மனுதாரர்/5–ம் எதிரி கடந்த 30.12.2025–ம் தேதி முதல் சுமார் 63 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வரும் நிலையில் அரசு தரப்பில் புலன் விசாரணையானது ஆரம்பகட்ட நிலையில் இருந்து வருவதாக வாதிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர் 60 நாட்களுக்கு மேலாக நீதிமன்ற காவலில் இருந்து வரும் நிலையிலும் அரசு தரப்பில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு இறுதியறிக்கை தாக்கல் செய்யபடாத நிலையிலும் மனுதாரருக்கு சட்டப்படியான பிணை வழங்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே வேளையில் இந்த வழக்கில் மனுதாரருடன் சேர்ந்து குற்ற செயல்களில்

ஈடுபட்ட 2 முதல் 4, 6 மற்றும் 7 எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதை கருத்தில் கொண்டும், இந்த வழக்கில் ஏமாற்றப்பட்ட தமிழகத்திலுள்ள சுமார் மூவாயிரம் நபர்களை கண்டறிந்து விசாரணை செய்யவேண்டியிருப்பதாகவும், பாதிக்கப்பட்ட நபர்களை ஏமாற்றி பெறப்பட்ட தொகை ரூபாய் 40 கோடியை கைப்பற்றி பறிமுதல் செய்ய வேண்டியிருப்பதாகவும், எதிரிகளின் வங்கி கணக்கு பரிவர்த்தனை விவரங்களை சேகரிக்க வேண்டியிருப்பதாகவும், அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களை கருத்தில் கொண்டும் கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் பிணை வழங்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் மனுதாரரின் சட்டப்படியான பிணை கோரும் மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

06. அதன்படி, மனுதாரர்/5-ம் எதிரி பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிணையில் விடுவிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

(அ) மனுதாரர்/5-ம் எதிரி தானும் தனக்காக இரண்டு நபர்களும் ரூபாய் 25,000/- மதிப்பிலான பிணையத்தை இந்த நீதிமன்றம் திருப்தியுரும் வகையில் நிறைவேற்றி கொடுக்கவேண்டும். மேற்படி பிணையதாரர்கள் இருவரும் மனுதாரருக்கு நெருங்கிய இரத்த உறவினர்களாக இருக்க வேண்டும். மேலும் பிணையதாரர்கள் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடாதவர்களாக இருக்க வேண்டும்.

(ஆ) மேற்படி பிணையதாரர்கள் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019-ல் இணைக்கப்பட்ட நீதித்துறை படிவம் 46-ன் படியான விண்ணப்பத்தில் தங்களது புகைப்பட நகல்களை ஒட்டி இடது கை பெருவிரல் ரேகைகளை பதிவு செய்து கொடுக்கவேண்டும். அவர்களுடைய சட்டப்டியான அடையாள அட்டையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

(இ) மனுதாரர் பிணையில் வெளிவந்த நாளிலிருந்து மறு உத்தரவு வரும் வரை பெரம்பலூரில் தங்கியிருந்து தினமும் காலை 10.30 மணிக்கும் மாலை 05.30 மணிக்கும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்து செய்து வரவேண்டும். புலன் விசாரணை அதிகாரி விசாரணைக்காக வேண்டும்போது தவறாது மேற்படி விசாரணை அதிகாரி முன்பு ஆஜராகி விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

(ஈ) மனுதாரர் இந்த வழக்கு தொடர்பாக எந்தவிதத்திலும் வேறு நபர்களுடன் தொடர்பு கொண்டு பேசக்கூடாது.

(உ) மனுதாரர் இந்நீதிமன்ற உத்தரவின்றி பெரம்பலூரை விட்டு வெளியூருக்கு எங்கும் செல்லக்கூடாது.

(ஊ) மனுதாரர் சாட்சிகளை மிரட்டவோ, ஆவணங்களை அழிக்கவோ கூடாது.

(எ) வழக்கின் விசாரணைக்கு எவ்விதத்திலும் குந்தகம் விளைவிக்கக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனுதாரருக்கு பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட நிபந்தனைகள் மனுதாரரால் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் மேற்படி நிபந்தனைகளில் ஏதேனும் கடைப்பிடிப்படவில்லை என்பது தெரியவந்தால் மேற்படி மனுதாரருக்கு வழங்கிய பிணை இரத்து செய்யப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இன்று 09.03.2026-ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் என்னால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

MURALITHARAKANNAN K

CHIEF JUDICIAL MAGISTRATE
Digitally signed by MURALITHARAKANNAN K
Location: PERAMBALUR
Date: 2026.03.09 19:44:07 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்**
**பெரம்பலூர்.**